சுருக்கம்

முதலமைச்சர் பொது நிவாரண நிதி – "நிவர் புயல்" – மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை நாள் 27.11.2020 – நிவர் புயல் மற்றும் கனமழை காரணமாக உயிரிழந்த 4 நபர்களின் குடும்பத்தினருக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படும் ரூ.4.00 இலட்சம் நிவாரண உதவி போக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.6.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.24,00,000/– (ரூபாய் இருபத்து நான்கு இலட்சம் மட்டும்) நிதியுதவி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, பேரிடர் மேலாண்மை அலகு, பே.மே.[I(1)] பிரிவு.

அரசாணை (1டி) எண்.385

நாள்: 30 .11.2020

சார்வரி, கார்த்திகை 15,
திருவள்ளுவராண்டு 2051

படிக்கவும்:

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தி குறிப்பு எண்.261, நாள் 27.11.2020.
2. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கடித எண்.இ.இ.(1)/1875/2020, நாள் 27.11.2020.

******

ஆணை:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 27.11.2020 நாளிட்ட அறிக்கையில் நிவர் புயல் மற்றும் கனமழை காரணமாக உயிரிழந்த 4 நபர்களின் குடும்பங்களுக்கு 4 லட்சம் ரூபாய் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்தும், 6 லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்தும், ஆக மொத்தம் தலா 10 லட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

2. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் நிவர் புயல் 2020 காரணமாக 24.11.2020 முதல் 26.11.2020 வரை பெய்த கனமழையின் கராணமாக உயிரிழந்தவர்களின் விவரங்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

| வ. எண் | இறந்தவரின் பெயர் மற்றும் முகவரி திரு / திருமதி | மாவட்டம் | இறப்பின் தன்மை |
|---|---|---|---|
| 1. | ராஜா, (வயது 50) த/பெ. திரு. குப்பன், வி.ஆர். பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி, சென்ன்னை. | சென்னை | டாக்டர் பெசன்ட் ரோட்டில் நடந்து கொண்டு இருக்கும் போது தெருவிலிருக்கும் மரம் விழுந்து உயிரிழந்தமை. |
| 2. | ஆல்பர்ட் (வயது 38) த/பெ. சவரிமுத்து, எண். 474, அ பிளாக், காந்தி நகர், பல்லவன் சாலை, சென்னை. | சென்னை | மின்சாரம் கம்பத்தின் பழுதை சீர்செய்யும் போது மின்சாரம் தாக்கி கீழே விழுந்து உயிரிழந்தமை. |

/த.பி.பா./

| | | | |
|---|---|---|---|
| 3. | ராஜா (வயது 50)<br>த/பெ. திரு. தாமஸ்,<br>ஜனப்பசத்திரம், திருவள்ளூர். | திருவள்ளூர் | தனியார் ஆலையின் சுவர் இடிந்து விழுந்து உயிரிழந்தமை. |
| 4. | ராஜேஸ்வரி, (வயது 42)<br>க/பெ. கந்தசாமி,<br>குன்னூர், விழுப்புரம். | விழுப்புரம் | தூங்கிக் கொண்டு இருக்கும் போது சுவர் இடிந்து விழுந்து உயிரிழந்தமை. |

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 27.11.2020 நாளிட்ட ஆணைக்கிணங்க, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அளித்துள்ள விவரங்களின் அடிப்படையில் நிவர் புயல் மற்றும் கனமழை காரணமாக உயிரிழந்த கீழ்காணும் 4 நபர்களின் குடும்பங்களுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படும் ரூ.4.00 இலட்சம் நிவாரண உதவி போக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவியாக தலா ரூ.6.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.24,00,000/– (ரூபாய் இருபத்து நான்கு இலட்சம் மட்டும்) நிதியுதவி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

| வ. எண் | இறந்தவரின் பெயர் மற்றும் முகவரி திரு / திருமதி | மாவட்டம் | இறப்பின் தன்மை |
|---|---|---|---|
| 1. | ராஜா, (வயது 50)<br>த/பெ. திரு. குப்பன்,<br>வி.ஆர். பிள்ளை தெரு,<br>திருவல்லிக்கேணி,<br>சென்னை. | சென்னை | டாக்டர் பெசன்ட் ரோட்டில் நடந்து கொண்டு இருக்கும் போது தெருவிலிருக்கும் மரம் விழுந்து உயிரிழந்தமை. |
| 2. | ஆல்பர்ட் (வயது 38)<br>த/பெ. சவரிமுத்து,<br>எண். 474, அ பிளாக்,<br>காந்தி நகர்,<br>பல்லவன் சாலை,<br>சென்னை. | சென்னை | மின்சாரம் கம்பத்தின் பழுதை சீர்செய்யும் போது மின்சாரம் தாக்கி கீழே விழுந்து உயிரிழந்தமை. |
| 3. | ராஜா (வயது 50)<br>த/பெ. திரு. தாமஸ்,<br>ஜனப்பசத்திரம்,<br>திருவள்ளூர். | திருவள்ளூர் | தனியார் ஆலையின் சுவர் இடிந்து விழுந்து உயிரிழந்தமை. |
| 4. | ராஜேஸ்வரி, (வயது 42)<br>க/பெ. கந்தசாமி,<br>குன்னூர்,<br>விழுப்புரம். | விழுப்புரம் | தூங்கிக் கொண்டு இருக்கும் போது சுவர் இடிந்து விழுந்து உயிரிழந்தமை. |

4. மேலே பத்தி (3)–இல் ஒப்பளிக்கப்பட்டுள்ள மொத்த தொகையான ரூ.24,00,000/–(ரூபாய் இருபத்து நான்கு இலட்சம் மட்டும்)–இல் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் பெயரில் ரூ.12,00,000/– (ரூபாய் பன்னிரெண்டு இலட்சம் மட்டும்), திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பெயரில் ரூ.6,00,000/– (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பெயரில் ரூ.6,00,000/– (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்)–கான காசோலையை முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர், நிதி (முதலமைச்சர் பொது நிவாரண நிதி)த் துறை, சென்னை–9 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

/த.பி.பா./

5. மேலும் ஏற்கனவே மேற்காணும் நிகழ்வில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு வேறு எந்த வகையிலும் அரசின் நிதியுதவி வழங்கப்பட்டிருப்பின் அத்தொகையை இந்நிதியிலிருந்து பிடித்தம் செய்து முதலமைச்சர் பொது நிவாரண நிதி என்ற பெயருக்கு வழங்கக் தக்க வகையில் காசோலை/வரைவோலையாக அனுப்பும்படியும் மீதமுள்ள தொகையை உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு காசோலை மூலமாகவோ அல்லது அஞ்சலக சேமிப்பு வங்கிக்கணக்கு மூலமாகவோ உரிய நடைமுறை விதிகளின்படி வழங்கி, நிவாரணத்தொகை பயனாளிக்கு முழுமையாகப் போய்ச் சேரும் வகையில் செயல்பட்டு, அவரிடமிருந்து வரிவில்லையிட்ட அசல் பற்றுச் சீட்டினைப் பெற்று அதில் வட்டாட்சியர் பதவிக்கு குறையாத அலுவலரின் சான்றொப்பத்துடன் அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர், நிதி(முதலமைச்சர் பொது நிவாரண நிதி)த்துறை, சென்னை–9 அவர்களுக்கும், அதன் நகலினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கும் அனுப்பி வைக்குமாறு சென்னை, திருவள்ளூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.45283/முதலமைச்சரின் பொது நிவாரண நிதி/2020, நாள் 30.11.2020–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அதுல்ய மிஸ்ரா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர்,
நிதி (முபொநிநி)த் துறை, சென்னை–9. (3 படிகள்)
கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக
ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
மாவட்ட ஆட்சியர், சென்னை, திருவள்ளூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம்.

<u>நகல்:</u>

முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
முதலமைச்சரின் தனிப்பிரிவு, சென்னை–9.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (ம) தகவல்
தொழில்நுட்பவியல் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இகோ/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

30/11/2020
பிரிவு அலுவலா